செய்தி மக்கள் தொடர்பு துறை
309 நாள்: 31/5/18

# தமிழ்நாடு அரசு
## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
## அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், வேலூர் -10

வேலூரிலிருந்து பெங்களூரு செல்லும் சாலையில் கொணவட்டம் அடுத்த அப்துல்லாபுரத்தில் அமைந்துள்ள வேலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆகஸ்ட் 2018-ம் கல்வியாண்டு பயிற்சியாளர்களின் கலந்தாய்வு சேர்க்கைக்கு Online மூலம் விண்ணப்பங்கள் 28.05.2018 முதல் பதிவு செய்யப்பட்டு வருகிறது. விண்ணப்பிக்கும் கடைசி நாள் 27. 06. 2018 வரை ஆகும். கீழ்க்காணும் பிரிவுகளில் சேர 10-ஆம் வகுப்பு தேர்ச்சியும்

**FITTER, ELECTRICIAN , TURNER, MACHINIST, MECHANIC MOTOR VEHICLE, DRAUGHTSMAN CIVIL, WIREMAN, LEATHER GOODS AND FOOTWEAR**

கீழ்க்காணும் பிரிவுகளில் சேர 8-ஆம் வகுப்பு தேர்ச்சியும்

**WELDER, SHEETMETAL WORKER, CARPTNTER** பெற்றிருக்க வேண்டும் பல்வேறு தொழிற் பிரிவுகளில் சேர்க்கை ( ஆண் / பெண் ) இருபாலருக்கும் ஓராண்டு மற்றும் ஈராண்டு தொழிற் பிரிவுகளில் சேர்க்கை நடைபெற உள்ளது.

பயிற்சியில் சேர விரும்பும் பயிற்சியாளர்கள் அதற்கான விண்ணப்பத்தினை www.skilltraining.tn.gov.in என்கிற இணையதள முகவரியில் விபரங்கள் நேரடியாக பதிவு செய்திடல் வேண்டும். அதனை செய்திட இயலாத விண்ணப்பதாரர்களின் நலன் கருதி இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்திட தக்க வழிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

- இதற்கான பயிற்சிக்கட்டணம் முற்றிலும் இலவசம்
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் இலவச Bus Pass வழங்கப்படுகிறது
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் பிரதிமாதமும் வருகையின் அடிப்படையில் ரூ.500/ கல்வி உதவித்தொகை அரசால் வழங்கப்படுகிறது
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் புத்தகங்கள், வரைபடக்கருவிகள், சீருடைகள், சீருடை தையல் கூலி, காலணிகள் இலவசமாக வழங்கப்படுகிறது
- பயிற்சியாளர்களுக்கு தகுதியின் அடிப்படையில் விலையில்லா மடிக்கணினி மற்றும் மிதிவண்டி அரசால் வழங்கப்படுகிறது
- இதற்கான கல்வித்தகுதி தொழிற் பிரிவுகளைப் பொறுத்து 8 ம் வகுப்பு 10ம் வகுப்பு தேர்ச்சிப்பெற்றிருக்க வேண்டும்
- பிற்படுத்தப்பட்ட , மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பு / பழங்குடியினர் பயிற்சியாளர்களுக்கு இலவச உணவு வசதியுடன் தங்கும் விடுதி தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும்
- வயது வரம்பு 14 முதல் 40 வரை ஆகும் ( மகளிருக்கு வயது வரம்பு இல்லை )
- அனைத்துப் பயிற்சியாளர்களுக்கும் NIMI புத்தகம் அரசால் வழங்கப்படுகிறது
- இத்தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும் ( Campus Interview ) மூலம் தனியார் துறையில் வேலைவாய்ப்பு பெற்று வழங்கப்படுகிறது.